


CHURCH OF BODY OF LORD JESUS CHRIST
ATHUMANESAR
UNITED CHRISTIANS BELIEVERS FELLOWSHIP

# ஆத்துமநேசர் நமது இயேசு

## Athumanesar NamathuYesu

Price: Rs.5/-    Annual Subs:Rs.50/-

Volume:12    April - 2024    Issue: 01


# இனி எப்பொழுதும் வெற்றி ஜெயம் உண்டு

சிலுவையில் வெற்றிச் சிறந்தார்

நாமும் வெற்றிச் சிறப்போம்

சகல பிரயாசத்திலும் நல்ல பலனுண்டு

நன்மை செய்தால் வெற்றியும் ஜெயமும் மேன்மையும் உண்டு

இயேசுவோடு சேர்ந்து ஆளுகை செய்வோம்

இனி எல்லாம் நம்மைத் தேடி வரும்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை   கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி

**இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும் தேவனுடைய சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய ஆசீர்வாதம் எழுதுவது....**

தேவ கிருபையினாலும் ஜெபத்தினாலும் ஊழியங்கள் சபைகள் விருத்தியடைந்து பெருகுகிறது. உங்கள் ஜெபத்திற்கு உதவிகளுக்கு நன்றி. இயேசு கிறிஸ்து நம் பாவங்களை நீக்கி நாம் இரட்சிக்கப்பட உலகிற்கு மனிதனாக பிறந்து **33½** வருடம் நமக்கு வழியா வாழ்ந்து இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது என்று வேதத்தில் சொல்லியிருக்கிறபடி நமக்காக சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிருடன் எழுந்தார். உயிர்தெழுதலின் வல்லமையோடு நம் அருகாமையிலே ஆவியாக வந்திருக்கிறார்.

முழுவதுமாக அவருக்கு மறுபடி மறுபடி ஒப்புக்கொடுத்து உயிர்தெழுதலின் வல்லமையோடு எல்லாவற்றிலும் ஜெயம் பெற்று வெற்றி பெற்று வாழ்வோம். **கொலோசெயர் 1:13ன்படி** அன்பின் குமாரனுடைய ஆட்சிக்குள் ஒப்புக்கொடுப்போம். அவரோடு பாடுகளை சகிப்போம். ஆளுகையும் செய்வோம். **1 கொரிந்தியர் 6:1ன்படி** பரிசுத்த வாழ்க்கை செய்து உலகத்தை நியாயந்தீர்க்கிறவர்களாக இருப்போம். உங்கள் ஜெபத்திற்கு உதவிக்கு நன்றி, தொடர்ந்து எங்களுக்காக ஊழியத்திற்காக ஜெபியுங்கள், உதவியாயிருங்கள். இரவும் பகலும் பிரயாசத்தோடும் வேலை செய்து சாப்பிடுங்கள். பயப்படாதேயுங்கள். **அப்போஸ்தலர் 27:22ன்படி** தைரியம் கொண்டு திடமனதாயிருங்கள். **அப்போஸ்தலர் 28:30,31ன்படி** எல்லாரையும் ஏற்றுக் கொள்ளுவோம். தேவனுடைய ராஜ்யத்தை ருசித்து பிரசங்கிப்போம். இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசிப்போம். மத்தேயு 5:5ன்படி சமாதானத்தோடு பூமியை சுதந்தரிப்போம். ஆசீர்வதிக்கப்படுவோம். ஆமென்!!

**உங்களுக்காக ஜெபிக்கும் தேவனுடைய பிள்ளை, D.ஆசீர்வாதம்**

**கர்த்தரின் செய்தி**

# இனி எப்பொழுதும் வெற்றி உண்டு

**இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். மத்தேயு 14:14**

**நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;**

**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிச்சிறந்தார்.**

**கொலோசெயர் 2:14,15**

**...தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்;...**

**மத்தேயு 28:6**

**கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

**2 கொரிந்தியர் 2:14**

**கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அன்பான வாசகர்களே!** *வெற்றியும் ஜெயமும் நிச்சயம் நமக்கு உண்டு, நமக்காக சிலுவையிலே வெற்றி சிறந்தார். எப்பொழுதும் வெற்றி நமக்கு உண்டு என்று நம்முடைய தெய்வம் சொல்லியிருக்கிறார். நமக்கு எப்பொழுதும் வெற்றிக் கொடுக்க வேண்டும் என்று நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு விருப்பம். நம் தேவன் தோல்வியை விரும்பாத தேவன். சில காரியங்களில் வெற்றி, சில காரியங்களில் தோல்வியல்ல, சில சமயத்தில் வெற்றி, சில சமயங்களில் தோல்வியல்ல, இனி எல்லாவற்றிலும் வெற்றி, எப்பொழுதும் வெற்றி, ஜெயம் என்று கர்த்தர் சொல்லுகிறார். அன்பு தேவப்பிள்ளையே! நாங்களும் உங்களுக்குச் சொல்லுகிறோம், நிச்சயம் இனி எல்லாமே வெற்றிதான், ஜெயம்தான், உங்கள்*

தோல்வியைக் கூட வெற்றியாக கர்த்தர் மாற்றுவார். நம் தேவன் மகா வல்லமையுள்ளவர். இதற்காகத்தான் இயேசு மரித்து மூன்றாம் நாள் உயிருடன் எழும்பினார். ஆகவே கவலையேபடாதீர்கள். உங்கள் சோர்வுகள் உங்களை விட்டு அகலட்டும். தேவப்பிள்ளையே! எது எப்படியிருந்தாலும் பரவாயில்லை. இனி எல்லாமே வெற்றிதான், ஜெயம்தான், எப்பொழுதும் வெற்றிதான், ஜெயம்தான். இதை அப்படியே விசுவாசியுங்கள், நம்புங்கள் எல்லாம் வெற்றியாவதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பதை சற்று கவனியுங்கள். படித்த வசனத்தின்படி, கிறிஸ்துவுக்குள் வெற்றி என்கிறபடியால் இயேசு கிறிஸ்துவை முழுமனதுடன் விசுவாசியுங்கள், ஏற்றுக் கொள்ளுங்கள், பின்பற்றுங்கள், இயேசு கிறிஸ்துவே எல்லா வெற்றிக்கும் காரணராயிருக்கிறார். இயேசு இல்லாத ஜெயம், ஒரு காலத்தில் பெரிய தோல்வியாகி விடும். ஆகவே இயேசு கிறிஸ்துவினால் வெற்றி பெற்று முன்னேற, ஆசீர்வதிக்கப்பட, சந்தோஷமான வாழ்க்கை அமைய செயல்படுவோம். இயேசு கிறிஸ்துவினால் வெற்றியின் மேல் வெற்றி ஜெயம் பெற என்ன செய்ய வேண்டும்? என்று படிப்போம்.

## எல்லாவற்றிலேயும் வெற்றி
## முற்றிலும் வெற்றி வேண்டுமா?

**இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. ரோமர் 8:37**

**முதலாவது,** எல்லாவற்றிலும் வெற்றி, முற்றிலும் வெற்றி. இந்த வெற்றியை நமக்கு வைத்திருக்கிறவர் நம் கர்த்தர். அவர் மிகவும் அன்புள்ளவர். நம் மேலுள்ள அன்பினாலே தன்னையே நமக்காக ஒப்புக் கொடுத்தார், நமக்காக சிலுவையில் அறையப்பட்டு இரத்தத்தைச் சிந்தி மரித்தார். மரித்து, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழும்பி, இன்றும் ஜீவிக்கிறார். நம் மேல் வைத்த அன்பினாலே நம் அருகாமையிலே

எப்பொழுதும் ஆவியாக இருக்கிறார். ஆகவே இருதயத்தில் இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறேன், ஏன் இன்னமும் எனக்கு சில காரியங்களில் தோல்வி என்று சிலர் கேட்கிறார்கள். அன்பான தேவப்பிள்ளையே **பிலிப்பியர் 4:13ன்படி** கிறிஸ்து நம்மை பெலப்படுத்தும்படி அவருடைய பெலத்தைப் பெற வேண்டும். அவருடைய பரிசுத்த ஆவியைப் பெற்று, எப்பொழுதும் அவருடைய பரிசுத்த ஆவியினால் பெலனடைந்து கொண்டேயிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரே! என்னை பெலப்படுத்தும், பெலப்படுத்தும் என்று ஜெபிக்க வேண்டும். அப்பொழுது எல்லாமே வெற்றியாக மாறும், முழு அளவு ஜெயம் கிடைக்கும், ஆசீர்வதிக்கப்படுவோம்.

## தேவ வார்த்தையினால் பிறக்க வேண்டும்
## வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்;... 1 யோவான் 5:4**

**இரண்டாவது,** எல்லாவற்றிலேயும் வெற்றி, முற்றிலும் ஜெயம் வேண்டுமானால், தேவனால் பிறக்க வேண்டும். தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும். வார்த்தையினால் ஜெனிப்பிக்கப்பட வேண்டும் வேதத்திலுள்ள வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வேத வசனங்களின்படி நடப்பேன் என்று தீர்மானம் செய்ய வேண்டும். **சங்கீதம் 119:1,2ன்படி,** வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தாராக மாற வேண்டும், அவரை முழு இருதயத்தோடு தேடுகிறவர்களாக மாற வேண்டும். **சங்கீதம் 1:2,3ன்படி,** கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் வேதத்தை தியானித்துக் கொண்டே, நமக்கு இருக்கும் ஒவ்வொரு காரியங்களையும் உண்மையும் உத்தமமுமாய் பிரயாசப்பட்டு செய்ய வேண்டும். அப்பொழுது நாம் செய்வதெல்லாம் வாய்க்கும்.

நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப் போல செழிப்பாகவும் இருப்போம். தன் காலத்தில் கனிக் கொடுக்கிற மரத்தைப் போல, கர்த்தருக்குப் பிரியமாகவும் அநேகருக்கு பிரயோஜனமாகவும் இருப்போம். ஆசீர்வதிக்கப்படுவோம். எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்கும், ஜெயம் கிடைக்கும்.

## சந்தேகம் அவிசுவாசம் என்ற பிசாசுக்கு இடமே கொடுக்கக் கூடாது

**...நம்முடைய விசுவாமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

**இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? 1 யோவான் 5:4,5**

**மூன்றாவது,** எல்லாவற்றிலும் வெற்றி, ஜெயம். எப்பொழுதும் வெற்றி, முற்றிலும் வெற்றி ஜெயம் கர்த்தர் கொடுக்க நமக்கு விசுவாசம் தேவைப்படுகிறது. நாம் விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தில் நிச்சயம் இனி ஜெயம் உண்டு. வெற்றி உண்டு என்று விசுவாசித்து கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சரீரம் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். சந்தேகமே வரக்கூடாது. சந்தேகம் தான் பெரிய பிசாசு. சந்தேகம், அவிசுவாசம் என்ற பிசாசுக்கு இடமே கொடுக்கக் கூடாது. **எபிரேயர் 11:32,33,34ன்படி,** நிச்சயம் நமக்கும் பெரிய ஜெயம் கிடைக்கும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னதை நினைவில் வைத்து, இயேசுவை விசுவாசித்து, நம் விசுவாசத்தைக் கிரியைகளின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுது நிச்சயம் வெற்றியும், ஜெயமும் நமக்கு கிடைக்கும். **1 பேதுரு 5:7ன்படி** பலத்த கையாகிய சபைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

## சகல பிரயாசத்திலும் நல்ல பலனுண்டு

**குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்;**

**ஜெயமோ கர்த்தரால் வரும். நீதிமொழிகள் 21:31**

**நான்காவது,** நமக்கு எப்பொழுதும் எல்லாவற்றிலேயும் வெற்றிக் கிடைக்க, முற்றிலும் வெற்றிக் கிடைக்க, ஜெயம் கிடைக்க நாம் நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும்? சமயத்தை வீணாக்கக் கூடாது. ஒவ்வொரு நிமிஷத்தையும் ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும். சோம்பேறியாக இருக்கக் கூடாது. **நீதிமொழிகள் 31:13ன்படி,** வேலைகளைத் தேடி செய்ய வேண்டும். உற்சாகமாய் செய்ய வேண்டும். **சங்கீதம் 127:3ன்படி,** அதிகாலையில் எழும்ப வேண்டும். **நீதிமொழிகள் 22:29ன்படி,** நம் வேலையில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நன்றாக பிரயாசப்பட வேண்டும். **நீதிமொழிகள் 14:23ன்படி,** சகல பிரயாசத்தினாலும் நிச்சயம் பிரயோஜனமுண்டு என்பதை மறந்து விடவே கூடாது. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறு காரியமானாலும், பெரிய காரியமானாலும், பிரயாசப்பட்டு, முயற்சி செய்து, சரியாக செய்ய வேண்டும். சுறுசுறுப்போடும் உற்சாகத்தோடும் வேலைகளைச் செய்ய வேண்டும் சுறுசுறுப்புள்ளவனுடைய கை செல்வத்தைச் சேர்க்கும். சுறுசுறுப்புள்ளவனுடைய கை ஆளுகைச் செய்யும். **1கொரிந்தியர் 15:10ல்** பவுல் எல்லோரையும் விட அதிகப் பிரயாசப்பட்டதாகப் படிக்கிறோம். **ரோமர் 16:12ல்,** மிகவும் பிரயாசப்பட்ட மூன்று பேரை வாழ்த்தும்படி பவுல் எழுதுகிறதைப் படிக்கிறோம். ஆகவே வெற்றியும், ஜெயமும் கிடைக்க நாம் நம்மை ஆயத்தப்படுத்தி பிரயாசப்பட வேண்டும். ஜெயத்தோடு வாழுவோம், ஆளுவோம்.

## ஆலோசனைக்காரர்கள் நமக்கு அநேகர் தேவை

**நல்யோசனைசெய்து யுத்தம்பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும். நீதிமொழிகள் 24:6**

**ஐந்தாவது,** எல்லாவற்றிலும் எப்பொழுதும் வெற்றி

கிடைக்க, எல்லாவற்றிலும் ஜெயம் கிடைக்க, முற்றிலும் வெற்றி கிடைக்க, நல்ல ஆலோசனைக்காரர்கள் வேண்டும். **நீதிமொழிகள் 1:5ன்படி,** ஆலோசனைகள் வேண்டும். உண்மையும் உத்தமமுமான நம்மேல் கரிசணையுள்ள ஆலோசனைக்காரர்கள் வேண்டும். **ஏசாயா 9:6ன்படியும், சங்கீதம் 32:8ன்படியும்,** கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும். **2நாளாகமம் 10:6ன்படி,** முதியோர்களின் ஆலோசனை வேண்டும். **அப்போஸ்தலர் 20:26ன்படி,** ஊழியர்களின் ஆலோசனை வேண்டும். **நீதிமொழிகள் 12:20ன்படி,** நம்முடைய சமாதானத்தை விரும்புகிறவர்களின் ஆலோசனை வேண்டும். அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் என்று **நீதிமொழிகள் 11:14ல்** படிக்கிறோம். **சங்கீதம் 139:17ன்படி,** கர்த்தரின் ஆலோசனைகள் எத்தனை அருமையானது என்று படிக்கிறோம். **நீதிமொழிகள் 20:18ன்படி,** ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுத்து, நம் நல்ல எண்ணங்கள் நிறைவேறும்படி செயல்படுவோம். அப்பொழுது ஆலோசனைக்காரர் அநேகரால் நிச்சயம் வெற்றி உண்டு. ஜெயம் உண்டு.

## மகா பெரிய பெலமுள்ளவராகிய இயேசுவின் கையில் நல்ல அம்பாக இருக்க ஒப்புக்கொடுப்போம்

**...வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்....**

**1 யோவான் 2:13**

**வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். சங்கீதம் 127:5**

**ஆறாவது,** நமக்கு வெற்றியும் ஜெயமும் கிடைக்க ஆவிக்குரிய ஜீவியத்தில் வாலிபர்களாக மாற வேண்டும். அதாவது, மகா பெலனுள்ள இயேசு கிறிஸ்துவின் கைக்குள் நாம் வர வேண்டும். உண்மையான ஊழியர்களின் ஐக்கிய ஒழுங்குக்குள் வர வேண்டும். கர்த்தர் சொல்லுகிறபடி ஊழியம் செய்ய வேண்டும். நல்ல அனுபவமுள்ள ஊழியர்களுடைய சொற்படி ஊழியம் செய்ய வேண்டும்.

ஊழியத்திற்கு உதவியாக இருக்க வேண்டும். மகா பெரிய பெலமுள்ள கர்த்தருடைய சித்தத்தின்படி ஊழியம் செய்ய வேண்டும். நல்ல பெலத்தைப் பெற்று ஊழியர்களுடன் ஐக்கியப்பட்டு ஊழியம் செய்ய வேண்டும். ஊழியத்தை செய்து, ஆத்துமாக்களை சரியான சபையில் சேர்க்க வேண்டும். அப்பொழுது வெற்றியும் ஜெயமும் கிடைக்கும். **யோவான் 12:26ன்படி,** இயேசுவுக்கு ஊழியம் செய்வோம். பிதாவாகிய தேவனால் கனம்பண்ணப்படுவோம், பேர்பெற்றவர்களாவோம்.

## இயேசுவோடு சேர்ந்து சிலுவையின் பாடுகளை சகிப்போம், அவரோடு ஆளுகையும் செய்வோம்

**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிச்சிறந்தார்.**

**கொலோசெயர் 2:15**

**ஏழாவது,** சிலுவையில் வெற்றிச் சிறக்கப்பண்ணும் தேவன். நாமும் இயேசுவுக்காக, நீதிக்காக படுகிற பாடாகிய சிலுவையினால் வெற்றி உண்டு. நீ நீதி செய்யும் போது, சில பாடுகள் வரும் போது பயப்படாதே! கர்த்தருக்காகப் படும் பாடுகளைக் குறித்துக் கவலைப்படாதே! நிச்சயம் உங்கள் ஒவ்வொரு பாடுகளுக்கும் வெற்றி உண்டு ஜெயம் உண்டு, அவரோடு பாடுகளை சகித்தோமானால் அவரோடு ஆளுகையும் செய்வோம் என்று **2 தீமோத்தேயு 2:12ல்** படிக்கிறோம். ஆகவே சிலுவையாகிய பாடுகளினால் வெற்றியையும் ஜெயத்தையும் பெறுவோம். இயேசுவோடு பாடுகளை சகிப்போம், ஆளுகை செய்வோம்.

## கண்ணீரோடு ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம்

**உன் கண்களை என்னை விட்டுத்திருப்பு, அவைகள் என்னை வென்றது;... உன்னதப்பாட்டு 6:5**

**எட்டாவது,** நம் கண்களினால் நமக்கு வெற்றி உண்டு. நம் கண்களினால் இச்சைகளோடு பார்க்கக் கூடாது. **நீதிமொழிகள் 22:9ன்படி** கருணைக்கண் உள்ளவர்களாக இருக்க

வேண்டும், நம் ஆகாரத்தை தரித்திரருக்கு கொடுக்க வேண்டும், மன்றாடி ஜெபிக்க வேண்டும். **ஆதியாகமம் 32:28ன்படி** யாக்கோபு தேவனோடும், மனிதரோடும் போராடி மேற்கொண்டார் என்று படிக்கிறோம். யாக்கோபைப் போல போராடி ஜெபிப்போம். யாக்கோபு தன் அண்ணனை கனப்படுத்தி, அவனுக்கு வெகுமதிக் கொடுத்தான். லாபானுக்கு உதவி செய்தான். இவ்வாறு நாமும் மனிதர்களுக்கு உதவி செய்து வெற்றி பெறுவோம். இரவும் பகலும் வேலைசெய்து வாய்ப்பு இருக்கும் போது ஜெபம் செய்து ஜெபமே ஜெயம் என்றபடி வெற்றி என்ற ஜெயம் கொள்வோம்.

## நன்மை செய்தால் வெற்றியும், ஜெயமும், மேன்மையுமுண்டு

**நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினால் வெல்லு. ரோமர் 12:21**

**ஒன்பதாவது,** எப்பொழுதும் வெற்றி, எல்லாவற்றிலும் வெற்றி, முற்றிலும் வெற்றி பெற, யாருக்கும் தீமை செய்யக்கூடாது. நமக்கு தீமை செய்கிறவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்ய வேண்டும். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகக் கூடாது. நன்மை செய்தால் மேன்மை உண்டு என்று **ஆதியாகமம் 4:7ம்** வசனத்தில் படிக்கிறோம். நாம் செய்யும் ஒவ்வொரு நன்மையும் நமக்கு, நிச்சயம் அநேக வெற்றிகளைக் கொண்டு வரும். ஆகவே யார் யாருக்கு என்ன நன்மை செய்ய வேண்டுமோ, அந்த நன்மைகளைச் செய்வோம். வெற்றிப் பெறுவோம். நன்மை செய்ய வேண்டியவர்களுக்கு தக்க சமயத்தில் செய்யாதது பாவம். ஆகவே நன்மை செய்வோம், வெற்றியும் ஜெயமும் கிடைக்கும். முற்றிலும் கிடைக்கும். நிச்சயம் சகல வேதனைகளும், நோய்களும், தோல்விகளும் மாறும். பெரிய அளவு, முழு அளவு ஜெயமும், வெற்றியும் இனி நம்மைத் தேடி வரும். கடன் தொல்லைகளில் ஜெயம் கிடைக்கும். நீ கடன் வாங்கமாட்டாய், கடன் கொடுப்பாய்.

## கர்த்தர் இயேசு வாக்குக் கொடுக்கிறார், இனி வெற்றியும் ஜெயமும் உங்களைத் தேடி வரும்.

இதைப்படிக்கிற தேவனுடைய பிள்ளைகளே! இதுமட்டும் உங்களுக்கு இருந்த, இருக்கிற தோல்வி, வேதனை, நஷ்டம், நோய்கள், பேய்கள், போராட்டங்கள், ஏமாற்றம், தொந்தரவுகள், கடன் தொல்லைகள் இவைகளை நினைத்து நினைத்து இனி கவலைப்படாதீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இனி வருமோ என்று பயப்படாதீர்கள். கர்த்தர் இயேசு வாக்குக் கொடுக்கிறார். இனி எப்பொழுதும் வெற்றி, எல்லாவற்றிலும் வெற்றி, முழுஅளவு வெற்றி, முழு அளவு ஜெயம் கிடைக்கும் என்று சொல்லுகிறார். ஆகவே முழுவதும் கிறிஸ்துவுக்குள் வாருங்கள். இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள். முற்றிலும் இயேசுவுடைய பிள்ளையாக மாறுங்கள். பாவங்களை விட்டு விலகுங்கள், நம்புங்கள், விசுவாசியுங்கள், ஒவ்வொரு காரியத்திலும் சுறுசுறுப்பாயிருங்கள், பிரயாசப்படுங்கள், நல்ல முயற்சிகளை மேற்கொள்ளுங்கள், உற்சாகமாக இருங்கள். உற்சாகமாக செயல்படுங்கள், கர்த்தரின் ஆலோசனைகளையும், தேவ ஊழியர்களின், பெரியோர்களின் ஆலோசனைகளையும் விரும்பி கேளுங்கள். கர்த்தருடைய கையில் நல்ல அம்பாக இருங்கள். ஊழியம் செய்ய ஊழியத்திற்கு உதவியாகயிருக்க உங்களை ஒப்புக்கொடுங்கள். அதிகமாக ஜெபியுங்கள். யார் யாருக்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள். உங்களால் இயன்ற அளவு நன்மைகளைச் செய்யுங்கள். இயேசுவைக் குறித்து அறிகிற அறிவின் வாசனை உங்கள் மூலம் வெளிப்படட்டும். இந்த அனுபவம் ஏற்பட முற்றிலும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுங்கள். பரிசுத்த ஆவியினாலும்

அக்கினியினாலும் அபிஷேகத்தைப் பெறுங்கள். ஆவியின் பெலத்தைத் தேடுங்கள், இப்பொழுதே இதற்கான வல்லமையைக் கர்த்தர் உங்களில் அனுப்புகிறார். ஜெபியுங்கள், இதோ! நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன், ஜெபிப்போம்.

## ஜெபம்:

எங்கள் அன்பின் பரலோக தந்தையே! கர்த்தாவே! இந்த நல்ல வேளைக்காக, நல்ல செய்திக்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே! இதுமட்டும் இருந்த சகல வேதனைகளும், சோதனைகளும், நெருக்கங்களும், வியாதிகளும், பேய்களும் வேண்டாம். கர்த்தாவே! எனக்கு இருக்கும் எல்லாம் வேதனைகளையும், தோல்விகளையும் நீக்கும். இனி எப்பொழுதும் வெற்றி, எல்லாமே ஜெயம், முற்றிலும் ஜெயம் என்று சொல்லி இருக்கிறீர், உமக்கு ஸ்தோத்திரம். **வெளிப்படுத்தினவிசேஷம் 21:7ன்படி** எல்லாவற்றையும் சுதந்தரிக்கச் செய்யும். என்னை, எங்களைப் பெலப்படுத்தும், வழிநடத்தும், ஆசீர்வதியும், உயர்த்தும், உபயோகியும், அநேகருக்குப் பிரயோஜனமாக்கும். இனியாகிலும் உம் விருப்பத்தின்படிச் செய்து வேதனைகள் நீங்கி, எல்லா நன்மைகளாலும் நிரப்பப்பட உதவிச் செய்யும். எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும். எல்லாவித பிசாசின் போராட்டங்களையும் என்னை விட்டு, எங்களை விட்டு, எங்கள் வீட்டை விட்டு, தெருவை விட்டு அகற்றும், ஊரை விட்டு, நாட்டை விட்டு அகற்றும், தேசத்தை விட்டு நீக்கிவிடும். பூமியை விட்டு அகற்றும். **பிலிப்பியர் 4:19ன்படி** குறைவையெல்லாம் மகிமையினால் நிறைவாக்கும். நிறைவாக்கி ஆசீர்வாதங்களைத் தாரும், எல்லா ஆசீர்வாதங்களினாலும் நிரப்பும். ஒரு குறைவுமின்றி காத்துக்கொள்ளும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!!

## சாட்சிகள்

**1. எனது கணவருக்கு கடந்த 1 வருடமாக யூரின் இன்ஃபெக்ஷன் ஆகி வேதனைபட்டுக் கொண்டிருந்தார்.** *யூரின் டிராக்கின் கீழ் கட்டி இருந்தது. அறுவை சிகிச்சை செய்தால் மட்டுமே சரி செய்ய முடியும் ஆனால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று கூறினார்கள். நான் கர்த்தரை நோக்கி ஜெபம் செய்தேன். தேவன் என் ஜெபத்தைக் கேட்டு ஜனவரி மாதத்திலே அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்று கட்டி அகற்றப்பட்டது. 5 வாரங்கள் கழித்து மீண்டும் நார்மலாக யூரின் போக கர்த்தர் கிருபை செய்தார். மரண படுக்கையிலிருந்த என் கணவருக்கு பூரண சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.*

**கனி ரவிக்குமார், கோயம்புத்தூர்.**

**2. எனது இரண்டரை வயது பேரக்குழந்தை வாய் பேசாதபடி இருந்தான்.** *சளி இருமலில் மிகவும் கஷ்டப்பட்டான். ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். நீங்களும் எங்களுக்காக ஜெபித்தீர்கள். கர்த்தரின் பெரிதான கிருபையால் இப்பொழுது நன்றாக பேசுகிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.* **வனஜா நெல்சன், வைரக்குடி.**

**3. என் அம்மாவிற்கு நெஞ்சுவலி வந்து மிகவும் கஷ்டப்பட்டார்கள்.** *அப்பொழுது நான் துதித்து, ஜெபம்பண்ணிவிட்டு ஐயாவை தொடர்பு கொண்டு ஜெபித்தேன். ஐயாவும் ஜெபம் செய்தார்கள். ஜெபம் செய்த கொஞ்ச நேரத்தில் என் அம்மாவிற்கு நெஞ்சுவலி நீங்கியது. கர்த்தர் சுகம் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

**ஜெனித்தா, முருக்கங்குடி.**

**4. எங்கள் வீட்டின் அருகில் இருக்கும் ஒரு சகோதரி புற்றுநோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்.** *உடலெல்லாம் அரிப்பு மிகுதியாய் இருக்கும். இந்நிலையில் நான் அவர்களுக்காக நம்முடைய சபையில் இருந்து ஜெப எண்ணெய் வாங்கிக்கொண்டு போய் கொடுத்தேன். அவர்களுக்கு நடந்த பெரிய அதிசயம் ஜெப எண்ணெய் உபயோகித்த உடன் உடலில் இருந்த அரிப்பு நீங்கி சுகம் உண்டானது. கேன்சர் புண்களிலிருந்தும் சுகம் கிடைத்தது. சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.* **சகோதரி குணசீலி.**

**5. எனது அம்மா செய்வினை கட்டுகளாலும், பிசாசின் போராட்டத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.** *குடும்பமாய் மூன்று நாட்கள் முழுநேரமாய் உபவாசித்து ஜெபித்தோம். கர்த்தர் இரங்கி அம்மாவிற்கு பெரிய விடுதலையைக் கட்டளையிட்டார். மேலும் நாங்கள் இன்றைய நாளிலே சொந்தமாக நிலம் வாங்கும்படி ஆசீர்வதித்த இயேசப்பாவிற்கு கோடி ஸ்தோத்திரம்.*

**பபிதா ஸ்டாலின், ஆபிரகாம்பண்டிதர் நகர்.**

**6. எனக்கு வலது கை நடுவிரலில் நகச்சுற்று ஏற்பட்டு வலி வேதனையாக இருந்தது.** *மருத்துவரிடம் சென்று பார்த்த போது மருந்து மாத்திரையில் சரியாகவில்லை என்றால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். நான் ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். நாங்களும் விசுவாசத்துடன் ஜெபித்தோம். கர்த்தர் எங்களது விசுவாசத்தின் ஜெபத்தைக் கேட்டு அறுவை சிகிச்சை இல்லாமல் குணமாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

**சுப்புலெட்சுமி கோபாலகிருஷ்ணன், தஞ்சாவூர்.**

**7. என்னுடைய மருமகள் கர்ப்பப்பையில் நீர்க்கட்டி இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள்.** *அதற்காக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் 80,000 ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். மருத்துவக்காப்பீடு மற்றும் ரேஷன்கார்டு இல்லாத சூழ்நிலையில், இக்கட்டான வேளையில் தேவசமூகத்தில் இதன் தேவைக்காய் ஜெபம் செய்தேன். ஜெபத்தைக் கேட்டு தேவைகளை சந்தித்த தேவன், எந்த ஒரு செலவும் இல்லாமல் திருச்சியிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நல்ல முறையில் அறுவை சிகிச்சை நடைபெற்று மருமகளும் நலமாக இருக்கிறாள். மருமகளை பாதுகாத்த கிருபைக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.* **சாந்தி, மானோஜிப்பட்டி.**

**8. எனது மகளுக்கு திருமணமாகி பதினொன்று வருடமாக குழந்தை இல்லாமல் இருந்தது.** *நாங்கள் தஞ்சாவூர் ஆத்துமநேசர் சபைக்கு வந்து தங்கி இருந்து ஜெபித்துவிட்டு சென்றோம். பதினொன்று வருடத்திற்கு பிறகு 2022ல் எனது மகளுக்கு பெண் குழந்தை பிறக்க ஆண்டவர் உதவி செய்தார். ஆண்டவருக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்.* **தேன்மொழி சண்முகம், கரூர்.**

**7. தவிர்க்க முடியாத காரணத்தால் எனது கையில் விபத்து ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது.** *அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். நமது சபையில் சொல்லி ஜெபிக்க கேட்டுக்கொண்டேன். ஊழியர்கள் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஊழியர்களின் ஜெபத்தைக் கேட்டு அறுவை சிகிச்சை இல்லாமல் எனது கை தற்போது நன்றாகி விட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

**த.கு.யாழினி, நெதர்லாந்து, ஜெர்மனி.**

**8. எனக்கு தலைவலியால் கை கால் எல்லாம் செத்ததுபோல இருந்தது.** *ஐயாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்தேன் ஜெபம் செய்தபின் தண்ணீரில் ஜெப எண்ணெய் ஊற்றி குடிக்கச் சொன்னார்கள், நானும் குடித்தேன். குடித்த சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து விட்டேன். அதன்பிறகு நன்றாக இருக்கிறேன். சுகம் கொடுத்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.* **வசந்தி, வாகரப்பட்டை.**

## சிறுவர் பகுதி

சென்னை மாநகரத்தில் ஒரு பள்ளிக் கூடத்தில் ஜான்சி என்ற பிள்ளை 8ஆம் வகுப்பு படித்து வந்தாள். நல்ல அறிவு ஞானம் ஆண்டவர் அந்த பிள்ளைக்கு தந்திருந்தார். படிப்பில் முதல்தரமாக வருவாள். ஆனால் விளையாட்டிலோ ஒன்றுமில்லை. படிப்பைத் தவிர வேற ஏதும் முயற்சி செய்யாத மகள். ஒருநாள் உடற்பயிற்சி ஆசிரியர் அவளை பேட்மிண்டன் விளையாட அழைத்தார். அவளுக்கோ ஏதும் தெரியாததால் போய் விளையாட அஞ்சினாள். மறுபடியும் ஆசிரியர் வற்புறுத்த வேறுவழியின்றி பேட் -ஐ பிடித்து விளையாடினால், எல்லா பந்தையும் தவறவிட்டாள். சுற்றி இருந்த அனைவரும் ஏளனமாக சிரித்தனர். எல்லோருடைய கிண்டலையும் கேட்கமுடியாமல் ஓடிப்போய் மரத்தடியில் நின்று அழுதாள். மறுநாளும் ஆசிரியர் விளையாட சொல்ல அதையே செய்தாள். பலவிதமான கேலி கிண்டலுக்கு ஆளானாள். மனம் உடைந்து அழுதாள். ஏன் இந்த அவமானம்? கேலி கிண்டல் என்று ஆண்டவரிடம் அழுதாள். மீண்டும் மீண்டும் ஆசிரியர் வற்புறுத்தியதால் விளையட சென்றாள். மறுபடியும் கேலி கிண்டலுக்கு ஆளானாள். ஆறு மாதம் இவ்வாறே அவள் வாழ்க்கை சென்றது. விளையாட்டு வகுப்பறை வந்தாள் ஓடி ஒளிவாள். ஏழாவது மாதம் விளையாட கற்றுக்கொண்டாள். பந்தை அடிக்கவும் அதை தடுக்கவும் ஆரம்பித்தாள். நாட்கள் செல்ல செல்ல மிகவும் அருமையாக விளையாட ஆரம்பித்தாள். 9ம் வகுப்பு படிக்கும்போது பேட்மிண்டன் டீமில் அவள் பள்ளிக்கூடம் சார்பாக விளையாட சென்றாள்.

ஆம் பிள்ளைகளே, **உபாகமம் 28:8ல்** சொல்லியிருக்கிறபடி நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் என்ற வசனத்தின்படி ஆண்டவர் ஜான்சியை ஆசீர்வதித்தார். அதேபோல நாமும் நாம் கையிடும் எந்த வேலையாக இருந்தாலும் ஆண்டவரிடம் ஜெபித்து ஞானம் அறிவு பெற்றுக்கொண்டு செய்தோமென்றால் ஆண்டவர் நம்மை மேன்மேலும் ஆசீர்வதிப்பார். அநேகருக்கு முன்மாதிரியாகவும், சாட்சியாகவும் வைப்பார். ஆமென்!!

**பெண்கள் பகுதி**

**நல் ஆலோசனைகளையும் திவ்ய வழிநடத்துதலும்**

**…நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான். மத்தேயு 2:13**

*தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிற ஒவ்வொரு தேவபிள்ளையும் தன்னுடைய ஒவ்வொரு அசைவிலும் தேவனுடைய வழிநடத்துதலுக்கு ஒப்புக் கொடுத்து அதின்படி மாத்திரமே நடக்க வேண்டும்.*

*அந்நாட்களில் தேவன் தம்முடைய ஜனங்களை அக்கினி ஸ்தம்பத்தினாலும் மேக ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார்.* **யாத்திராகமம் 40:34,36–38 வசனங்களின்படி, ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. வாசஸ்தலத்திலிருந்து மேனம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாம் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது என்று எழுதப்பட்டிருக்கிறது.**

*இந்நாட்களில் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணி முழுமையான வெளிப்பாட்டை நமக்குத் தந்து தெளிவாய் நம்மை வழிநடத்துகிற காலமாயிருக்கிறபடியால், அந்நாட்கள் போல நம் கண்கள் காண வழிநடத்தும் அடையாளங்களை எதிர்ப்பார்க்கமுடியாது.*

*சாஸ்திரிகள் போனபின்பு கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு எரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடுவான், அதனால் நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய் நான் உனக்குச் சொல்லுமளவும் அங்கே இரு என்று எச்சரித்து வழிநடத்தப்படுகிறதைக் காண்கிறோம். தூதர்கள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. நமது காதுகளில் தகுந்த ஆலோசனைகளைச் சொல்லும் போது அது நம் இருதயங்களிலிருந்து வருகிற நமது ஆலோசனையாயிருக்கும் என்று எண்ணி விட்டு விடுகிறோம். தேவன் நமக்கு உள்உளர்வைத் தந்து, இதைச்செய், செய்யாதே, போ, போகாதே, கொடு, வைத்திராதே, நான் சொல்லும் வரைக்கும் அங்கேயே இரு என்று கட்டளைப் பிறப்பிக்கும்போது அந்த மெல்லிய சத்தத்தை அபிஷேகம் பெற்ற காதுகள் கேட்டு உணர்ந்து கீழ்படிய வேண்டும். எந்தக் காரயமானாலும் அதுவும் மிகுந்த ஆபத்தான வேளையில் பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலுக்குக் காத்திருக்க வேண்டும். வார்த்தை வரும் வரைக் காத்திருக்க வேண்டும். அவசரப்படக்கூடாது.*

*பிள்ளைகளே, தேவன் நம்மேல் மிகவும் கவனம் வைத்து நம்மைப் பாதுகாப்பதில் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்ற அறிவு நமக்கு ஆறுதலையும், உன்னதமானவரின் கரத்தில் பாதுகாவலாய் இருக்கிறோம் என்ற நிச்சயமான உணர்வையும் தருகிறது. ஒரு குழந்தை தாய் மடியில், தகப்பன் தோளில் எவ்வளவு ஆனந்தமா; இளைப்பாறுவோமோ அப்படியே மாயமற்ற விசுவாசத்தில் இளைப்பாறுகிற விசுவாசியை ஒரு அவிசுவாசி ஏளனமாகத்தான் கருதுவான். அதைக் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. பரலோகத்தின் தேவன் நம் பிதாவானவர். அண்டசராசரங்களையும் ஆளுகிறவர் நம்மை அவருடைய ராஜ்யமாக்கி ராஜாதி ராஜாவாக நமது சர்வத்தையும் ஆளுகைச் செய்து தமது சித்தத்தை நம்மில், நம்மூலம் நிறைவேற்றுவார். எழுந்து புறப்பட்டு போ என்றால் நாம் உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும். ஏதாவது முக்கியமான காரணம் இருக்கும். ஒளிந்து மறைந்து இரு என்றால் அமைந்து காத்திருக்க வேண்டும். நமது கடமையைச் செய்ய வேண்டிய இடமே நமது பாதுகாப்பான இடம். கர்த்தர் கட்டளை வரும்வரைக்கும் அந்த இடத்தைவிட்டு அசையக் கூடாது. கர்த்தர் தாமே நமக்கு அனுக்கிரகம் பண்ணுவாராக. ஆமென்! அல்லேலூயா!!*

# பரிசுத்த பர்வதம்

# LOVER OF SOULS GOSPEL

**கட்டுகள் அறுக்கும் ஜெபம் மற்றும் விடுதலையின் ஆசீர்வாதக் கூட்டம்**
**ஆகிய இந்த இரண்டு கூட்டங்களையும் இணையதளத்தில் காணலாம்**

***Youtube-*ல் காண விரும்புகிறவர்கள்**

# PARISUTHA PARVATHAM

## விடுதலையின் ஆசீர்வாதக் கூட்டம்

**இந்த மாதம் 20 -ம் தேதி மூன்றாவது சனிக்கிழமை**
**காலை 10.00 மணி – 1.00 வரை**

**தேவசெய்தி:**

அப்போஸ்தலர் **Ð ஆசீர்வாதம்**

சகோ. **ஜேசன் ஆசீர்வாதம்**

**வறுமை நீங்கி ஆசீர்வாதம் பெற**
**பாவம், சாபம், வியாதி, பில்லிசூனியம், செய்வினை, ஏவல் நீங்க**
**குடும்பத்தின் அனைத்து பிரச்சனைகள் மாற வாருங்கள்**
பரிசுத்த பர்வதம், சாஸ்திரா பல்கலைக்கழகம் எதிரில்,
தஞ்சை – திருச்சி மெயின் ரோடு, தஞ்சாவூர்.
**சகோ. ஜேசன் ஆசீர்வாதம் : 83000 00293**

## கட்டுகள் அறுக்கும் ஜெபம்

**இந்த மாதம் 8 -ம் தேதி அமாவாசை தினத்தன்று**
**இரவு 10.00 மணி – 2.00 மணி வரை**

**தேவசெய்தி:**

அப்போஸ்தலர் **Ð ஆசீர்வாதம்**

சகோ. **ஜேசன் ஆசீர்வாதம்**

**பில்லிசூனியம், செய்வினை, ஏவல் பிசாசின்**
**கட்டுகள் உடைய வாருங்கள்**
பரிசுத்த பர்வதம், சாஸ்திரா பல்கலைக்கழகம் எதிரில்,
தஞ்சை – திருச்சி மெயின் ரோடு, தஞ்சாவூர்.
**தொடர்புக்கு : 83000 00293**

## அன்பார்ந்த ஆத்துமநேசர் நமது இயேசு பத்திரிக்கையின் வாசகர்களுக்கு ஓர் அன்பின் வேண்டுகோள்!!!

இப்பத்திரிக்கையின் ஒவ்வொரு பக்கமும் தேவனுடைய வல்லமையால் நிரம்பி இருக்கிறது. இப்பத்திரிக்கையை வைத்து விசுவாசித்து ஜெபிக்கும்போது அநேக நன்மைகளை பெற்றுக் கொண்டவர்கள் அநேகர். இப்பத்திரிக்கை தங்கு தடையின்றி வெளி வருவதற்கு வாசகர்களாகிய உங்களது ஜெபமும் உதாரத்துவமான காணிக்கையும் தேவைப்படுகிறது. ஆகவே தங்களால் இயன்ற காணிக்கையை கீழே கண்டுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கி கணக்கில் காசோலை/வரைவோலை ஆகவோ செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கி அதற்குரிய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். கர்த்தர் தாமே உங்கள் எல்லாரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆத்துமநேசர் நமது இயேசு பத்திரிக்கைக்கு
சந்தா மற்றும் நன்கொடை செலுத்துபவர்களின் அன்பான கவனத்திற்கு

| | |
|---|---|
| BANK | : STATE BANK OF INDIA |
| BRANCH | : THANJAVUR MAIN |
| ACCOUNT NAME | : ATHUMANESAR NAMATHU YESU |
| ACCOUNT NO. | : CURRENT A/C NO:32870102469 |
| IFSC CODE | : SBIN0000924 |
| MICR CODE | : 613002002 |
| CBS CODE | : 0924 |
| SWIFT CODE | : SBININ BB 464 |

**NET BANKING** மூலமும் அனுப்பலாம்

**DD & CHEQUE** (காசோலை) **& MONEY ORDER** மூலமும் அனுப்பலாம்

அனுப்பவேண்டிய முகவரி: பாஸ்டர் D. ஆசீர்வாதம், 17, மாணிக்கம் நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர் - 613007.

காசோலை மூலம் சந்தா செலுத்துபவர்கள் அதற்கான விவரங்களை மின்னஞ்சல் முகவரியில் தெரியப்படுத்தவும்

E.mail: athumanesarnamathuyesu@gmail.com

*For Contact*:- Pastor. Jims Asirvatham - +919965114141

## தஞ்சாவூர் ஆத்துமநேசர் தலைமை சபையின்
## ஆராதனை ஒழுங்குகள்

தினந்தோறும் காலை ஜெபம் : 5.00 மணி – 7.00 மணி
வேத வாசிப்பு : காலை 5.00 – 6.00 மணி
பாடல் வேளை : காலை 6.00 மணி – 6.30 மணி
காலை தேவசெய்தி : காலை 6.30 மணி – 7.30 மணி

ஞாயிற்றுகிழமை ஆராதனைகள்
காலை 6.00 – 7.30 வரை முதல் ஆராதனை
காலை 8.30 – 10.30 வரை 2ம் ஆரானை
காலை 10.30 – 1.30 வரை 3ம் ஆராதனை
முதல் ஞாயிறு – திருவிருந்து ஆராதனை

**வாலிபர் கூட்டம்**
மூன்றாவது ஞாயிறு
மதியம்
2.00 – 3.00 வரை

**மூப்பர்கள் கூட்டம்**
ஒவ்வொரு
சனிக்கிழமையும்
இரவு
7.00 – 8.00 வரை

முதல் செவ்வாய்க்கிழமை
ஊழியர்கள் கூட்டம் – தலைமை சபை, தஞ்சாவூர் காலை 10.00 மணி – 1.30 மணி
சுவிசேஷக்கூட்டம் – பரிசுத்த பர்வதம், தஞ்சாவூர் பிற்பகல் 3.00 மணி – 5.00 மணி

முதல் வெள்ளிக்கிழமை
இரவு ஜெபம் – இரவு 10 மணி – 2 மணி

வெள்ளிக்கிழமை உபவாச ஜெபம்
காலை 10.00 மணி – 1.30 மணி

முதல் சனிக்கிழமை
ஏழைகளுக்கு உதவி செய்யும் கூட்டம் காலை 10 மணி – 12.30 மணி
திருவிருந்து ஆராதனை இரவு 7 மணி – 8.30 மணி

விடுதலையின் ஆசீர்வாதக் கூட்டம் – பரிசுத்த பர்வதம்
மாதத்தின் 3வது சனிக்கிழமை காலை 10.00 மணி – 1.00 மணி
கட்டுகள் அறுக்கும் ஜெபம் – பரிசுத்த பர்வதம்
மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று
இரவு 10.00 மணி – அதிகாலை 2.00 மணி

இந்த இரு கூட்டங்களையும்
*PARISUTHA PARVATHAM*
(பரிசுத்த பர்வதம்) என்ற
யூடியுப் சேனலில் காணலாம்

*FACEBOOK* (ஃபேஸ்புக்)–ல் காண விரும்புகிறவர்கள்
அருகிலுள்ள *Barcode*–ஐ செய்து பார்க்கலாம்

*YOUTUBE* (யூடியுப்)–ல் காண விரும்புகிறவர்கள்
அருகிலுள்ள *Barcode*–ஐ செய்து பார்க்கலாம்
கேட்டு ஆசீர்வாதம் பெறுங்கள்.
ஞாயிறு ஆராதனை மற்றும் செவ்வாய் சுவிசேஷக்கூட்டம்
மற்றம் அனைத்து ஜெபங்களிலும் ஆலயத்திற்கு வந்து
கலந்து கொள்ளலாம்.
இணையதலத்தில்
ATHUMANESAR INDIA என்னும் *Channel*–ல் காணலாம்.

SUBSCRIBE-LIKE-SHARE – பண்ணுங்கள்

1. ஆலயத்திற்கு வரும்போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும்.
2. ஆராதனை முடிந்தவுடன் யாருடனும் பேசாமல் வீட்டுக்குச் செல்லவும்.

அரசாங்க / சபை விதிமுறைகளின்படி செயல்பட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

DATE OF PUBLICATION : 05.04.2024
Registered News Paper Regn. RNI.No. TNTAM/2012/46679
Registered No. SSP/TJ/33/2022-24 Licensed to post without pre-payment
WPP License No. TN/PMG (CR)/WPP/03/2022-24 (Valid upto 31.12.2024)
Owned, Printed & Published By D.ASIRVATHAM
Published & Printed at: Athumanesar Offset Printers, 17, Manickam Nagar,
Thanjavur - 613007, Tamilnadu. Editor: D.ASIRVATHAM

...உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.யோவான் 16:20

# அற்புதப் பெருவிழா 2024

தேவ செய்தி:
அப்போஸ்தலர் D.ஆசீர்வாதம் ஐயா
தலைமை போதகர், ஆத்துமநேசர் ஊழியங்கள், இந்தியா
மற்றும் கிளை சபை போதகர்கள்

ஏப்ரல் 2024
24
புதன்கிழமை
மாலை 6.00 மணி

இடம்:
ஆத்துமநேசர் பெனியேல் சத்திய சபை,
தச்சமொழி தெற்குத் தெரு, (மீன் கடை அருகில்), சாத்தான்குளம்.

அன்புடன் அழைக்கும்
சகோ. S. பால் ஆபிரகாம்,
ஆத்துமநேசர் பெனியேல் சத்திய சபை,
சாத்தான்குளம்

தொடர்புக்கு:
94430 86162
81100 79041

அற்புதங்களைப் பெற அனைவரும் வாருங்கள்

இயேசுவின் நாமமே மேலான நாமம்

பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன்,... லூக்கா 12:49

சீயோன் மலையில்

# அபிஷேக கூட்டம்

நாள்: 25 வியாழன் – ஏப்ரல் 2024
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை
இடம்: சீயோன் மலை, தாளார்குளம், முக்கூடல் வழி, திருநெல்வேலி

தேவ செய்தி:
அப்போஸ்தலர் D. ஆசீர்வாதம்
தலைமை போதகர், ஆத்துமநேசர் ஊழியங்கள், இந்தியா
மற்றும் கிளை சபை போதகர்கள்

எந்தவித நோயாக இருந்தாலும் பில்லிசூன்ய கட்டுகளாக இருந்தாலும்
ஊழியத்தில் சோர்வுகள், தடைகள் இருந்தாலும்
வாருங்கள், பங்குபெறுங்கள்! கட்டுகள் உடையும், அபிஷேகம் பெறுங்கள்!
ஆசீர்வதிக்கப்படுங்கள்!!

சுவி. ஜேசன் ஆசீர்வாதம்
8300000293

Facebook YouTube ATHUMANESAR INDIA

தொடர்புக்கு:
பாஸ்டர். ஜிம்ஸ் ஆசீர்வாதம்
9994301076, 9791403323

தொடர்புக்கு: பாஸ்டர். ஜெ. ஜெயக்குமார், 9443426243

இயேசுவின் நாமமே மேலான நாமம்

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்...
யோவான் 8:32

ஆத்துமநேசர் ஊழியங்கள்
நடத்தும்

# விடுதலையின் நற்செய்தி கூட்டம் 2024

தேவ செய்தியாளர்
Apostle D. ஆசீர்வாதம் அவர்கள்
தலைமை போதகர், ஆத்துமநேசர் ஊழியங்கள், இந்தியா
மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய ஆத்துமநேசர் சபை ஊழியர்கள்

நாள்: ஏப்ரல் 26
2024 வெள்ளிக்கிழமை

நேரம்:
காலை 10 மணி முதல் 1 மணி வரை

இடம்: ஆத்துமநேசர் சபை,
7வது குறுக்குத் தெரு, டிம்பர் டிப்போட ரோடு ராணித் தோட்டம், நாகர்கோவில்.
இவன் கிறிஸ்துவின் பணியில்: Pr.J.D.ஒபதியா, Pr.D. ஜஸ்டஸ்
மற்றும் சபை விசுவாசிகள்
தொடர்புக்கு: 9488887181, 9894656364

இயேசுவின் நாமமே மேலான நாமம்

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.
அப்போஸ்தலர் 4:12

ஆத்துமநேசர் ஊழியங்கள்
நடத்தும்

# விடுதலையின் பெருவிழா 2024

தேவ செய்தியாளர்
Apostle D. ஆசீர்வாதம் அவர்கள்
தலைமை போதகர், ஆத்துமநேசர் ஊழியங்கள், இந்தியா
மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய ஆத்துமநேசர் சபை ஊழியர்கள்

நாள்: ஏப்ரல் 26, 27, 28
2024 வெள்ளி, சனி, ஞாயிறு
நேரம்:
தினமும் மாலை 6 மணி முதல் 9.30 மணி வரை

இடம்: ஆத்துமநேசர் சபை,
திப்பிரமலை, பாலவிளை காலனி, எட்டணி, கருங்கல்

27.04.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு விஷேசித்த உபவாச கூட்டம் நடைபெறும்

இவன் கிறிஸ்துவின் பணியில்: Pr.ராஜன், Sis.சரோஜா மற்றும் சபை விசுவாசிகள்

பாவமா? சாபமா? கவலையா? கண்ணீரா? பிசாசின் போராட்டமா? தீராத வியாதியா? சமாதானம் இல்லையா?
இயேசு விடுவிப்பார்! குடும்பமாக வாருங்கள், சபை பாகுபாடின்றி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

தொடர்புக்கு: 94882 90012, 94893 90239, 98651 95034

**If Undelivered return request to:**
**Apostle. D. ASIRVATHAM**
**Athumanesar Ministries,**
**17, Manickam Nagar, M.C. Road,**
**Thanjavur - 613007, TN, INDIA.**
**PH: 9994301076, 8300000293**

Posted @ Thanjavur R.M.S on 5th of Every Month